## காட்பாடி கிங்ஸ்டன் பள்ளியில்

# ஓணம் திருவிழா



▶ காட்பாடி கிங்ஸ்டன் சிபிஎஸ்இ பள்ளியில் ஓணம் விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் பள்ளி முதல்வர் ஸ்வர்ணலதா.

வேலூர், செப்.14: காட்பாடி கிங்ஸ்டன் சிபிஎஸ்இ பள்ளியில் நேற்று முன்தினம் ஓணம் திருவிழா கோலாகலமாக நடந்தது. கிங்ஸ்டன் கல்விக்குழுமத் தலைவரும், வேலூர் எம்பியுமான கதிர் ஆனந்த், பள்ளி தாளாளர் சங்கிதா கதிர் ஆனந்த் தலைமை தாங்கினர்.

தொடர்ந்து பள்ளி முதல்வர் ஸ்வர்ணலதா முன்னிலையில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் வண்ணப்பூக்களால் பள்ளி வளாகத்தில் கோலமிட்டு பாரம்பரிய ஓணம் விழாவை கொண்டாடினர். இதையடுத்து மாணவர்கள், ஆசிரியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது.